©
தமிழ்நாடு அரசு
1998

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந. 5)துறை

# அரசாணை (நிலை) எண் 32, நாள் 15-4-1998

ஆதிதிராவிடர் நலம்—ஆதிதிராவிடர் நலனுக்காக பேரூராட்சிகளில் தாட்கோ மூலம் க
வணிக வளாகங்களை அந்தந்த பேரூராட்சிகளுக்குத் தவணை முறையில் விற்
ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும் :

1. அரசாணை (நிலை) எண் 32, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
நாள் 15—3—1995.

2. அரசாணை (நிலை) எண் 91, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
நாள் 20—4—1995.

3. மேலாண்மை இயக்குநர், தாட்கோ கடிதம் எண் சி/18599/94/தொநு/அ-
6—8—1996 மற்றும் 5—5—1997.

4. பேரூராட்சிகளின் இயக்குநரின் நேர்முகக் கடிதம் எண் 17427/97/டி.4
20—8—1997.

**ஆணை :—**

தமிழ்நாட்டின் இருபது மாவட்டங்களில் மாவட்டம்தோறும் சராசரியாகப் ப
வணிக வளாகங்கள் வீதம் கட்ட முடிவெடுக்கப்பட்டு முதலில் மொத்தம் எண்பத்தொன்
வளாகங்கள் தாட்கோ மூலம் கட்ட (பத்து கடைகள் கொண்ட ஒரு வணிக வளாகம் க
இலட்சம் செலவு) ரூ. 405 இலட்சங்கள் சிறப்பு மைய நிதியிலிருந்து ஒதுக்கி பார்வை
படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணையிடப்பட்டது. இதுவரை 69 வணிக வ
கட்டப்பட்டுவிட்டன. மீதமுள்ள வணிக வளாகங்களின் கட்டுமானப் பணி பல்வேறு
உள்ளன.

2. இக்கடைகளை வாடகைக்கு விடும் முறை; வாடகையை வசூல் செய்வது
தொடர்ந்து மாத வாடகைகளைப் பெறுவது, கணக்கு வைப்பதுபற்றி அரசு ஆய்வு
அவ்வாய்வின்போது இக்கட்டிடங்களை அந்தந்த நகராட்சி/பேரூராட்சிகளுக்குத்
அடிப்படையில் விற்றுவிடுவது நலம் என்ற கருத்து உருவாகியது. மேலும், தாட்கோ
செய்யும் தொகையை வட்டியோடு பெற்று இத்தொகையை அடுத்தடுத்துக் கூடுதல் வ
கட்ட பயன்படுத்திக் கொள்ளலாம் ; கடைகளை ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு
உறுதி செய்யும் வண்ணம் ஒதுக்கீட்டுக் குழுவில் தாட்கோ மாவட்ட மேலாளர் அல்லது
ஆதிதிராவிடர் நல அதிகாரியும் இருக்க வேண்டும் என்ற கருத்தும் உருவாகியது. இ
குறித்து தாட்கோ இயக்குநர் குழுமம் விவாதித்து, நிறைவேற்றப்பட்ட தீ
அடிப்படையில் தாட்கோ மேலாண்மை இயக்குநரும் இக்கருத்துருவினைப் பரிந்துரைத்
அறிக்கையினை பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசிற்கு அனுப்பியுள்ளா

3. பார்வை நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், இப்
மீதான தன்னுடைய பரிந்துரைகளை அனுப்பியுள்ளார். கடைகளைத் தாட்கோ மூலம் பே
நிலங்களில் கட்டி, தனியார்களுக்கு வாடகைக்கு விட்டு, வாடகைத் தொகையை
யும் தாட்கோவும் பகிர்வதற்குப் பதிலாக, தாட்கோ கட்டும் இக்கடைகளைப் பேரூர
தவணைக் கடன் அடிப்படையில் தாட்கோவிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம் எனப்
கப்பட்டது. இதன்படி பேரூராட்சிகள் தாட்கோவிற்குத் தவணைகளைத் திருப்பித்
பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கடைகளை பட்டியல் இனத்தவர்க்கும்/பழங்குடியினர்க்கும் வா
விட்டு வாடகைத் தொகையைப் பேரூராட்சிகளே ஈட்டிக் கொள்ளும். இது தொ
பேரூராட்சிகளின் இயக்குநர், தாட்கோ மேலாண்மை இயக்குநர் ஆகியோர் ஆதி
மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலருடன் கலந்து பேசியதில் உருவா
மித்த கருத்துக்கள் மீது அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு கீ
ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

(1) சிறப்பு மைய நிதியினின்றும் தாட்கோ மூலம் கட்டப்படும் வணிக வளா
பேரூராட்சி/நகராட்சிகளுக்கு முற்றிலுமாக விலைக்கு கடன் அடிப்படையில் விற்கலா

(2) வணிக வளாகங்கள் கட்டுவதற்கான செலவினத்தை தாட்கோவிற்கு செலுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் தீர்மானம் இயற்ற வேண்டும்.

(3) பேரூராட்சி/நகராட்சித் தலைவரின் தலைமையில் கீழ்க்கண்டவர்களைக் அமைக்கப்படும் ஒதுக்கீட்டுக் குழு ஒதுக்கீடுகளை முடிவு செய்யும் :—

(அ) அந்தந்த பேரூராட்சி/நகராட்சியின் தலைவர்.

(ஆ) அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்.

(இ) அந்தந்த பேரூராட்சி/நகராட்சியின் நிர்வாக அலுவலர்.

(உ) அந்தந்த பேரூராட்சி/நகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதியினர்/பழங்குடியின உறுப்பினர் ஒருவர்.

(4) இத் திட்டத்தின் பயனாளிகள் பட்டியல் சாதியினர்/பழங்குடியின மக்கள் தாட்கோவிற்கு கடன் தவணை முழுவதும் செலுத்தப்பட்ட பின்னரும் பயனாளிகள் பட்டியல் சாதியினர்/பழங்குடியின மக்களாகவே இருப்பர்.

(5) திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் பட்டியல் சாதியினர்/பழங்குடியின மக் கடைகள் பேரூராட்சி/நகராட்சிகளால் வாடகைக்கு விடப்படும். இந்த வாடகை நிர்ணயித்த வாடகைக்குக் குறைவாக விடப்படமாட்டாது.

(6) பேரூராட்சி/நகராட்சிகள் கடன் தொகையை ஐந்து ஆண்டுகளில் சதவீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்தல் வேண்டும்.

(7) பேரூராட்சி/நகராட்சிகள் தாட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தும் தொகைகளைப் பயன்படுத்தி வருங்காலங்களில் மேலும், வணிக வளாகங்கள் கட்டும் திட் தாட்கோ மேற்கொள்ளும்.

(8) இத் திட்டம் 1998-ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்.

4. தாட்கோ மேலாண்மை இயக்குநர், பேரூராட்சி இயக்குநர், நகராட்சி ஆகியோர் மேலே பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைச் செயலாக்கம் செய்யத் தகுந்த ந எடுக்கப் பணிக்கப்படுகின்றனர்.

5. இந்த ஆணை நிதித் துறையின் இசைவினை அ.சா. எண் 185/FS/P/9 13-1-1998-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிருத்துதாசு காந்தி,
அரசுச் செயலர்.

பெறுநர் :

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வச மேம்பாட்டுக் கழகம், சென்னை-600 101.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை-600 108.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-
நகராட்சிகளின் இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018 (பெயரில்).
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-600 035 (பெய
மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-2), சென்னை-600 006 (பெய

நகல் :

ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை-600 015.
நிதித் துறை, சென்னை-600 009.
நகர்ப்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (கமப/ஆதிந. 1/அந/ஆதிந. 6 சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் தனிச் செயலர், சென்னை-
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலரின் தனிச் செயலர், சென்னை-600 009.
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
உதிரிகள்/இருப்புக் கோப்பு.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவல